இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 336 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 01 – வெள்ளிக்கிழமை 17 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 336 : Thiruvalluvar Year - 2057 - Aadi 01 - Friday 17 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


### தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள்: த.வெ.க. அரசின் நிலைப்பாடு என்ன?

## 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை நிறுத்த வேண்டும்!

### ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 17-

தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகளைத் தொடங்க எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. கடந்த 5 ஆண்டுகளில் நவோதயா பள்ளிகளை தொடங்க எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. அரசு வாதிட்டு வந்தது. இந்நிலையில், இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆட்சி மாறியுள்ள நிலையில் தமிழ்நாடு அரசின் நிலை என்ன? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதுகுறித்து அரசு ஆலோசனை நடத்தி வருவதாகவும், பதிலளிக்க 12 வாரம் அவகாசம் வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், 3 வாரத்தில் அரசின் முடிவை தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.



மனுதாரரின் வாதத்தின்போது குறுக்கிட்ட நீதிபதி மகாதேவன், தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், அவர்கள் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தித் திணிப்பையே எதிர்க்கிறார்கள் என்று தெரிவித்தார். இதனையடுத்து வழக்கு ஆகஸ்ட் 11ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனிடையே, சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்று மொழிக் கொள்கையை கட்டாயமாக்குவது அவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

9ம் வகுப்பு மாணவர்கள் பொதுத் தேர்வை எழுத இருக்கிறார்கள், அவர்களுக்கு மும்மொழிக்கொள்கையைத் திணிப்பது மிகுந்த மன அழுத்தத்தை உருவாக்கும் என்பதால், மும்மொழிக் கொள்கையை கொண்டுவருவதை ஒன்றிய அரசு நிறுத்த வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### தமிழ்நாட்டில் 2 நாட்களுக்கு வெப்ப அலை நீடிக்கும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 17-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், வேலூர், ராணிப்பேட்டை, சேலம், ஈரோடு உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இன்று வெப்ப அலை நிலவும் என்று எச்சரித்துள்ளது. நாளையும் வெப்ப அலை நீடிக்கும் என்றும் கணித்துள்ளது. மேலும், இன்றும், நாளையும் தமிழ்நாடு கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையுடன் அதிக ஈரப்பதமும் இணைந்து காணப்படுவதால், வெப்பம் மற்றும் புழுக்கம் ஏற்படும் என்றும், இதனால், மக்களுக்கு அசௌகரியம் ஏற்படக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### போராட்டங்கள், மதச் சடங்குகளை நடத்த தடை!

புதுடெல்லி, ஜூலை 17-

நாடாளுமன்ற வளாகத்தில் பதாகைகளுடன் எம்.பி.க்கள் போராட்டம் மற்றும் தர்ணா நடத்துவதற்கு ஒன்றிய அரசு திடீர் தடை விதித்துள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வருகின்ற 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெற உள்ளது.

23 லட்சம் மாணவர்களின் கனவை நசுக்கிய நீட் வினாத்தாள் கசிவு, 17 லட்சம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு பிரச்சினையை ஏற்படுத்திய சி.பி.எஸ்.இ. பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் நடந்த குளறுபடி, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு, ஈரான் அமெரிக்கா போரில் 13 இந்தியர்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாடாளுமன்றத்தை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க வரும் 19ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்ற வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், பதாகைகளை ஏந்துதல், மதச் சடங்குகளை நடத்துதல் ஆகியவற்றில் ஈடுபட வேண்டாம் என்று எம்பிக்களுக்கு மக்களவைச் செயலகம் அறிவுறுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பிரதமரால் நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்ட போது மேலாடை இல்லாத பூசாரிகளால் செங்கோலுடன் நடத்தப்பட்டது மத நிகழ்வு இல்லையா? என்று திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் மகுவா மொய்த்ரா கேள்வி எழுப்பியுள்ளார்.

### கூடங்குளம் அணுமின் நிலைய தரவுகள் கசிவால் அதிர்ச்சி!

## பொதுமக்களின் பாதுகாப்பை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும்!

### முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 17-

தமிழகத்தின் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முக்கிய வரைபடங்கள், ஆவணங்கள், 'டார்க் வெப்' வலையமைப்பில் கசிந்து இருப்பதாக வெளியாகி இருக்கும் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதை தொடர்ந்து கண்காணித்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாடு அரசை வலியுறுத்தி உள்ளார்.



திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் 3 மற்றும் 4வது அணு உலைகளுக்கான உள்கட்டமைப்பு பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணிகளை அனில் அம்பானியின், 'ரிலையன்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்' நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ரிலையன்ஸ் குழும சர்வரில் இருந்து கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முக்கிய வரைபடங்கள், ஆவணங்கள் திருடப்பட்டு, டார்க் வெப் எனப்படும், மறை முகமாக இயங்கும் வலையமைப்பில் கசிய விடப்பட்டுள்ளன என்கிற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

மைய 'யோட்டா' என்ற தரவு சேவை வழங்கு நரின் சர்வரில் சேமிக் கப்பட்ட தரவுகளை, 'வேர்ல்ட் லீக்ஸ்' என்ற 'ரான்சம்வேர் ஹேக்கர்' குழு பகுதியளவு திருடி, இணைய தளத்தில் கசியவிட்டிருப்பதாக, 'ரிலையன்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்' நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

ஹேக்கர்கள் வெளியிட்டதாக கூறப்படும் 8.58 லட்சம் கோப்புகளில், 19,000 கோப்புகள் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றன.

'தரவுகள் கசிந்திருப்பது அணு மின் நிலையத்தின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுதலாக இருக்கும்' என, அணு பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆவணங்கள் எதிரிகள் கைகளுக்கு சென்றால், அணுமின் நிலையத்தின் துணை அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு விஷயத்தில் உள்ள பல வீனங்களை கண்டறிய முயற்சிப்பர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், வெளிப்புற ஹேக்கர் குழு தரவு கசிந்து இருப்பதாகவும் பின்னர் அதன் நம்பகத்தன்மை குறித்து விசாரித்து வருவதாகவும் விளக்கம் அளித்துள்ளது.

இதற்கிடையே முன்னாள் அமைச்சரும் விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான தங்கம் தென்னரசு, பொதுமக்களின் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### பழனி கோயிலில் ரூ.100 கோடி நில மோசடி:

## த.வெ.க. ஆட்சியில் மோசடி பத்திரப்பதிவு!

### விமர்சித்தவரை கைது செய்வதா? கண்டனங்கள் குவிகிறது!

பழனி, ஜூலை 17 -

பழனி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டதை விமர்சித்தவர் கைது செய்யப்பட்டதற்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரத்தில் கோவிலுக்கு சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை எவருக்கும் விற்பனை செய்யவோ அல்லது வில்லங்கபடுத் தவோ உரிமை கிடையாது. இத்தகைய கடுமையான சட்டப்பாதுகாப்பு மற்றும் கோயில் நிர்வாகத்தின் தொடர் எழுத்துப்பூர்வ ஆட்சேபனைகளையும் மீறி, கடந்த ஜூலை 6ஆம் தேதி, தனிநபர்கள் இருவரது பெயரில் 1.40 ஏக்கர் நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

த.வெ.க. ஆட்சியில் கோவில் நிலம் மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டு தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது அம்பலமாகி பக்தர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பழனி கோவில் நிலத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்ததில் ஊழல் நடந்தது உண்மைதான் என அமைச்சர் ரமேஷ் ஒப்புக்கொண்டிருந்தார். த.வெ.க. ஆட்சியில், பழனி கோயில் நிலத்தை, தனி நபர்களுக்கு பத்திரப்பதிவு செய்தது செல்லாது என உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில், த.வெ.க. ஆட்சியின் ஊழலை அம்பலப்படுத்தி சமூகவலைதளங்களில் கருத்து பதிவிட்ட வினோத் சூர்ய குமார் என்பவரை இரவோடு இரவாக காவல்துறையினர் கைது செய்துள்ளனர். தவெக ஆட்சியை விமர்சித்து கருத்து கூறினாலே கைது நடவடிக்கை என்பது அராஜகத்தின் உச்சம் என பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். கருத்து சுதந்திரத்திற்கு எதிராக த.வெ.க. அரசு செயல்படுவதாகவும் விமர்சித்து ள்ளனர்.

பழனி கோயில் நில மோசடி குறித்து கருத்து பதிவிட்டவர் கைது கருத்து கூறினாலே கைது நடவடிக்கையா? த.வெ.க. அரசின் அராஜகம் திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரத்தில் கோவிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தை எவருக்கும் விற்பனை செய்யவோ அல்லதுவில்லங்கப்படுத்தவோ உரிமை கிடையாது கடுமையான சட்டப்பாதுகாப்பு கோயில் நிர்வாகத்தின் தொடர் எழுத்துப்பூர்வ ஆட்சேபனைகளையும் மீறி

ஜூலை 6ல் தனிநபர்கள் இருவரது பெயரில் 1.40 ஏக்கர் நிலம் பத்திரப்பதிவு த.வெ.க. ஆட்சியில் கோவில் நிலம் மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டு தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது அம்பலம் பழனி கோவில் நிலத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்ததில் ஊழல் நடந்தது உண்மைதான் என அமைச்சர் ரமேஷ் ஒப்புக்கொண்டிருந்தார்.

### விஜய் ஆட்சியில் காவல்துறை அராஜகம்!

## லாக்அப் மரணங்கள் தொடர்கின்றன!

### புழல் சிறையில் கைதி மரணம்!

சென்னை, ஜூலை 17-

புழல் சிறையில் பாலாஜி மரணமடைந்ததற்கு காவல்துறையினரே காரணம் என குற்றஞ்சாட்டி, அவரது உறவினர்கள் ஊர் மக்கள், சேலையூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையை அடுத்த சேலையூர் பகுதியை சேர்ந்த பாலாஜி என்ற கைதி புழல் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். கடந்த 3 தினங்களுக்கு நாகர்கோவிலில் சபரிவர்மன் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட நிலையில், புழல் சிறையில் பாலாஜி உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெட்டி கடையில் குட்கா விற்பனை செய்ததாக பாலாஜியை சேலையூர் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அதன்பிறகு புழல் சிறையில் அடைக்கப்பட்ட அவர் திடீரென உயிரிழந்துவிட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இதனால், நேற்றே ஸ்டான்லி மருத்துவமனையில் அவரது உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் நடத்தினர்.

பாலாஜியின் மரணத்திற்கு காவல்துறைதான் காரணம் என குற்றஞ்சாட்டி வரும் உறவினர்கள், ஊர் மக்கள் சேலையூர் சேலையூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். 150க்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. ஆட்சியில் ஒரு புறம் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், மறுபுறம் லாக் அப் மரணங்கள் தலைத்தூக்கி வருவது மக்கள் மத்தியில் அதிருப்தியை மேலும் அதிகமாக்கியுள்ளது.

